**சுருக்கம்**

வேளாண்மைத் துறை – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா – கோ 52 நெல் இரகத்திற்கு எம்.ஜி.ஆர் 100 என்று பெயரிடுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (ப.க)த் துறை

அரசாணை (நிலை) எண்.301 தேதி: 04.12.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048

கார்த்திகை திங்கள் 18

படிக்க:

ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடிதம் நாள் 13.11.2017.

------

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களுடன் நடத்திய நேரடி கலந்தாய்வின்போது கேட்டுக் கொண்டதன்பேரில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இந்த ஆண்டு வெளியிடப்பட்ட நெல் இரகங்களில் ஒன்றுக்கு மறைந்த முன்னாள் தமிழக முதல்வரின் பெயரிட வேண்டுமென தெரிவித்தார் என்றும், அதனடிப்படையில் அவரின் நூற்றாண்டு பிறந்த தின கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக அவர்களின் புகழைப் போற்றும் வகையில், கோ 52 நெல் இரகத்திற்கு எம்.ஜி.ஆர் 100 என்ற பெயரிட்டு, வருகின்ற 29.11.2017ஆம் தேதி தஞ்சாவூரில் நடைபெறவிருக்கின்ற தமிழக அரசின் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செய்ய உத்தேசித்துள்ளது என்றும், மேற்காணும், கோ 52 நெல் இரகத்திற்கு எம்.ஜி.ஆர் 100 என்று பெயரிட்டு வெளியிடுவதற்கு அனுமதி அளிக்குமாறு அராய்ச்சி இயக்குநர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள் அரசினைக் கேட்டுக்கொண்டார்.

2. ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களுடைய கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனடிப்டையில் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு பிறந்த தின விழாவின் போது அதில் ஒரு அங்கமாக எம்.ஜி.ஆர் அவர்களின் புகழை போற்றும் வகையில் கோ 52 நெல் இரகத்திற்கு எம்.ஜி.ஆர் 100 என்று

பெயரிடுவதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 3.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 3.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை–5.
இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, கோயம்புத்தூர்–3.

நகல்
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின்
தனிச்செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்